

ஓலை 104| ஓசை 227| சனவரி 2025

# அகர முதல இலக்கியப் பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ம] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

**அறங்கூறா னல்ல செயினும் ஒருவன்
புறங்கூறா னென்றல் இனிது.**

## பொருள்

**ஒருவன் அறத்தைச் சொல்லாமல் பாவமே செய்தாலும்,
அடுத்தவரைப் பற்றிப் புறம் பேசமாட்டான் என்றால்
அதுவே அவனுக்கு நல்லது**

**அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய**

**9597887847**

**அகர முதல இலக்கியப் பேரவை**

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன்**
**குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி

**97, குஞ்சிதபாதம் நகர்,**
**டவுன்ஸ்டேஷன் தென்புறம்,**
**மயிலாடுதுறை-609001.**

# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## கெடுவது செய்யின் விடுவது கருமம்!

நான்கடித் தரவு கொச்சகக் கலிப்பா




கார்முகிலும் மழைமழலைக் கனிந்தீயா வண்ணமாக
நேர்நின்று இடிமின்னல் நேர்த்தியாகக் கேடுசெய்தும்
பார்செழிக்கப் பொழிந்துமழைப் பணிவுடனே நலன்விளைக்கும்.
சீர்கொண்டு கெட்டவர்க்கும் சீரறமும் செய்திடுவோம்!

வள்ளலேழு பேர்வாழ்ந்த வளமனத்து நாட்டினிலே
கள்ளமனங் கொண்டறமும் களைந்தேதான் கெடுதலையும்
பள்ளத்தை நோக்கியோடும் நீரைப்போல் ஏழையர்க்கே
கொள்ளையராய்ப் பொருள்குவித்தோர் கொடுமை செய்தல் நயன்மையில்லை!

நூல்பலவும் கற்றறிந்தும் நூல்பலவும் வடித்தீந்தும்
நூல்கொண்டு பெருமளவில் நுண்ணறிவுப் பெற்றவரும்
பால்மடியைக் கொய்தெடுக்கும் பாங்காகக் கேடுசெய்தல்
நால்மறையை ஓதியுமே நற்பயனு மேதுமில்லை!

கெட்டழியும் கெட்டவர்கள் கெடுதலினைத் தொடர்கொலையாய்
முட்டாள்கள் புரிந்தாலும் முழுநெஞ்சும் அறம்நிறைந்தோர்
கெட்டவர்க்கும் நல்வினையைக் கீழிறங்கி வந்துசெய்வர்;
கெட்டவர்கள் கெடுதலினைச் செயமறந்து திருந்தவேண்டும்!

தன்னலத்தின் போக்காலே தான்மட்டும் வாழவேண்டி
இன்னல்கள் விளைவித்தே ஏற்றசெல்வம் உடன்வாரா;
மன்னவனே என்றாலும் மனமுவந்து செய்தவினை
என்றென்றும் வதைத்திடுமே என்றெண்ணி அறம்செய்வோம்!




மழையைப்போல் நிலவைப்போல் வாழையைப்போல் கதிரைப்போல்
தழைத்தேதான் பிறர்வாழ தடம்மாறி தீவினையில்
பிழைத்திடாமல் கேடுகளை வேர்வரையில் கொன்றிடுவோம்;
விழைந்துகெடு வதுசெய்யின் விடுவதுவும் அறமாகும்!

**இலக்கணக் குறிப்பு:**

கலிப்பா வகைகளில் தரவுக் கொச்சகக் கலிப்பாவும் ஒன்று. இப்பாடல் ஒவ்வோரடியிலும் நான்கு நான்கு சீர்களாக அமையும். நான்கடிகள் முதல் எட்டடி வரை ஒரு பாட்டாக எழுதலாம். ஒவ்வொரு பாட்டுக்கும் ஒரே எதுகை வரும். ஒவ்வொரு அடியின் முதல் சீரிலும் மூன்றாம் சீரிலும் மோனை அமையும். பெரும்பான்மையாக காய்ச்சீர்களாகவே வரும். முதல் சீர் நேரசையில் தொடங்கினாலும் ஒவ்வோரடியிலும் 2, 3, 4 ஆம் சீர்களைக் கலித்தளை கலித்தளை வரும்படி நிரையசையில் தொடங்க வேண்டும் மேலே இருக்கும் தரவுக் கொச்சகக் கலிப்பா நான்கடிக் கொண்டதால் நான்கடியும் ஓரெதுகை பெற்று வந்துள்ளன. அடிகளை உள்ளே தள்ளி எண்சீர் மண்டிலம் போல மடக்கி எழுதாமல் நேராகவே எழுதுதல் வேண்டும்.

நெருப்பலைப் பாவலர் இராம. இளங்கோவன்

# உழைப்பு

பா வகை: இன்னிசை வெண்பா

1. தங்கும் இடத்தில் தகவுடன் வாழ்ந்திட
சங்கை ஒழிக்கவே சஞ்சலம் நீக்கிட
பங்கம் அகற்றியே பாங்காய் உழைத்திட
எங்கும் பெறலாமே ஏர்.

2. என்றும் உழைத்திட ஏற்றம் அடையலாமே
கன்றெனத் துள்ளிக் கருத்தாய்ப் பணியாற்றி
நன்றாய் இருக்க நலமுடன் வாழவே
கன்றல் விடுத்தல் கயம்.

3. அல்லல் களைய அடிமை விலங்குடை
எல்லி வருமுன் எழுந்திடு நீயுமே
கல்லி அறிவைக் கருத்தாய்ப் பெருக்கியே
வல்லமைப் பெற்றே வளர்.



கவிஞர் செ. கலைவாணி, மேட்டூர் அணை

# வேற்றுமையில் ஒற்றுமை காண்

பா வகை* -குறள்வெண் செந்துறை (எண்சீர் வருவது)
( காய்+ காய்+ காய்+ மா)

உயர்வென்றும் தாழ்வென்றும்
ஒருபோதும் இல்லை!
உணர்வுகளால் ஒன்றுபட்டே தொட்டிடுவோம் எல்லை!
இயல்பாக இருந்திடாமல்
வகுக்கின்றோம் பிளவே!
இதனாலே இழக்கின்றோம்
பெரிதளவே மாண்பே!

மொழியாலும் நிறத்தாலும்
வேற்றுமையும் உண்டே!
மொழிந்திடுவாய் களைந்திடுவாய்
ஒற்றுமையும் கண்டே!
விழியெனவே போற்றிடுவாய்
ஒற்றுமையை என்றும்!
வீறுகொண்டே நடந்திடுவாய் தரையினிலே நன்றே!

என்றென்றும் பெற்றிடுவாய்
எழிலான எண்ணம்!
ஏற்றமுடன் உயர்ந்திடுவாய்
உலகினிலே திண்ணம்!
இன்னமுதாய் ஒற்றுமையை
உன்னுள்ளே விதைப்பாய்!
என்றுமேநீ வேற்றுமையை
மாந்தரிலே களைவாய்!



கவிஞர் விஜயலக்ஷ்மி காளிதாசன், கோவை மாவட்டம்

# ஹைக்கூ

மரங்களற்ற நகரம்
மாற்று வழியின்றி கூடமைக்கிறது
மின்கம்பத்தில் பறவை

# லிமரைக்கூ

மரங்களற்ற நகரம்
மின்கம்பத்தில் பறவைக் கூடு
வாழவழியற்ற நரகம்

# தன்முனைக் கவிதை

கான்கிரீட் காடு
தெருவிளக்கில் பறவைக்கூடு
வாகனப் பேரிரைச்சலில்
நடுங்குகின்றன குஞ்சுகள்



கவிஞர் ராஜ் ஆரோக்கியசாமி, பிச்சாண்டார் கோவில்

# சிகரங்கள் தொட்டிடு

சிப்பிக்குள் முத்தாய் தங்கிடு
சிங்காரத் தமிழினில் கலந்திடு
சிப்பிக்குள் முத்தாய் தங்கிடு
சிங்காரத் தமிழினில் கலந்திடு

சிலுவைகள் சுமக்கவும் தயங்காதே
சிம்ம சொப்பனமாய் விலக்கிடு..
செல்வங்கள் சேர்ப்போம் புறப்படு
செவ்வாய் கிரகமும் தொட்டிடு.

நந்தவனப் பூக்களாய் மலர்ந்திடு
நறுமணம் வீசியே திகழ்ந்திடு.
உன்னதங்களை உயர்வாய் செய்திடு.
உறுதியாக படையோடு செயல்படு.

வண்ணங்கள் சிதறட்டும் மனதோடு.
வளரட்டும் எண்ணங்கள் முயற்சியோடு.
உதிக்கும் ஆதவனைக் கண்டிடு
உரமாய் உடலை உருவாக்கிடு.

வல்லமை மிக்க நற்செயல்களை
வாழ்நாள் முழுவதும் செய்திடு.
ஒன்றாய் இருக்க் கற்றிடு
ஒற்றுமையே ஓங்கச் செய்திடு.

இமயமலை சிகரங்கள் தொட்டிடு
இல்லை எனாதே வாழ்ந்திடு.
வெற்றிக் கொடிகள் கட்டிடு
வெண்மை மனம் கொண்டிடு.



வரலாற்றில் இடம் பிடித்திடு
வசைபாடா வாழ்வு தேர்ந்திடு.
நிழல்கள் கொஞ்சம் இகழ்ந்திடு
நிகழ்த்து உண்மையான மாற்றங்களை.

அந்தி மழையில் நனைந்திடு
அல்லும் பகலும் சிந்தித்திடு.
தமிழைத் தினமும் போற்றிடு
தானம் தர்மம் செய்திடு.

நல்லவைகளை எங்கும் விதைத்திடு
நானிலம் சிறக்கப் பாடுபடு.

கவிஞர் இராஜகை நிலவன், மும்பை


சீவகன்
பார்ப்பதற்கு இன்ப மூட்டும் அழகு
போர் பயிற்சிகள் அனைத்திலும் சூரன்
யாரும் மயங்கும் யாழில் இசைஞானி
தாரணி மயங்காத பெண்ணும் உண்டோ

களவாணிகள்
மாதம் ஒருமுறை வேடுவர் கூடினர்
இம்மாதம் மலையில் நடந்த கூட்டம்
வாதம் செய்யாமல் தலைவன் கூறினான்
"நாதம் ஒலிக்க ஆனிரை பற்றுவோம்"
( ஆனிரை: பசுக்கூட்டம் )

"வேந்தனின் பசுக்கள் மேய்ச்சலுக்கு வரும்
இந்தமுறை இடையரோடு வீடு திரும்பாது"
வந்த ஆனிரை வேடவர் களவாடினர்
மத்தால் கடையதயிர்போல் சிதறினர் .

சிதறிய இடையர் காட்டுக்குள் ஓடினர்
பதறினார்கள் பசுக்களைக் காணாமல்
கதறினார்கள் எப்படி வீடு திரும்புவது
தெறிநடை கன்றுகள் தாயைத் தேடின
(தெறிநடை : துள்ளுதல் )

இடைச்சியர் விடிய விடிய காத்திருந்தனர்
விடை தெரியாமல் கூடி பேசினர்
துடை தட்டி போராட வீரனில்லை
படை கொண்டு தாக்க அரசனேகதி




அரசனைக் காணச் சென்றனர் இடையர்
சிரம் தாழ்த்தி வணங்கி கதறினர்
"அரசே பசுத்திரளை வேடர் திருடினர்
தரணியில் உங்களை விட்டால் யாருளர்"

குறை கேட்ட மன்னன் வெகுண்டான்
நிறைவாகச் செல்லுங்கள் ஆனிரை வரும்
பறை தருவான் நம்பி சென்றனர்
சிறை பிடிக்க சென்றவர் திரும்பினர்
( பறை : விரும்பியது )

அரசன் படைகள் தோற்று ஓடின
சரமாரி அம்புகள் வீரர்கள் மாண்டனர்
தரமான மன்னன் இல்லை அவன்
சிரமத்திற்கு உள்ளான இடையர் வருந்தினர்

தொடரும்...

கவிஞர் ந.திருக்கோமு

# பகைத்திறம் அறிதல்

## அதிகாரம் : 88



பகையெனும் தீமையை
மனமகிழும் பகடியாய்.
நினைந்திடின் அஃது
நீதிநூல் அறத்திற்கெதிராம்.

ஏர்வில்கொண்ட உழவனெனும்
வீரனோடு பகைத்திடினும்.
சொல்லெனும் ஏர்கொண்ட
அறிஞனைப் பகைத்தலாகாது.

தனியனாய் இருந்தும்
பலர்பகைத் தேடிடுவோன்.
பித்துப்பிடித்தோனிலு மேலான
அறவீலியாய்க் கருதப்படுவான்.

பகைஞனையும் நட்பாடி
நல்நடத்தும் பண்புடைய.
மன்னனின் பெருமையினுள்ளே
இவ்வுலகே அடங்கியுள்ளதாம்.

துணையாருமின்றி பகையிரண்டு
கொண்டோன் அப்பகைஞருள்.
ஒருவனை இனியதுணையாய்
கொண்டிடல் நலமாம்.

முன்னே தெளிந்து
தானறிந்தோன் ஆயினும்.
மற்றொரு அழிவின்காலத்து
தெளியாது வாளாவிடல்நலம்.

தன்துன்பம் முன்வந்தறியா
நண்பருக்கும் தன்வலியிழப்பை.
பகைஞரிடத்தும் ஒருக்காலும்
தானாய்புலப்படுத்தல் கூடாது.

ஆக்கவகையறிந்து தன்வலிபெருக்கி
வெற்றிக்கான வழிதிருத்தி.
தற்காப்புத்தேடின் நம்மீது
பகைச்செருக்கு தேய்ந்தொழியும்.

முள்மரத்தை அஃதின்
இளையதிலேயே களைந்திடல்நலம்.
காழ்ப்பேறி முற்றிடினஃது
களைபவரின் கையறுக்குமாம்.

பகைத்தலைமை களையும்
வாய்பிலதை செய்யாதரசர்.
திண்ணமாய் மூச்சுவிடுமாறு
உயிரோடிருப்பர் இஃதுறுதி.

கவிஞர் ஆன்றனி ஜமுனா, நாகர்கோவில்

# அன்பின் தேடல்!

அன்பு இல்லங்களில்
கரங்கள் இணைத்து
வேண்டிக்கொள்ளும் குழந்தைகள்!

குழந்தைகளின் கனிவில்
கடவுளை தேடும் மக்கள்!

மக்களின் தேடல்
எப்படி நியாயம் ஆகும்?
கடவுள்தான் இக்குழந்தைகளையே
கைவிட்டவர் ஆயிற்றே!

அன்பை தேடல் இன்றி
செலுத்தி பாருங்கள்!
பயன் பிரபஞ்சம் அளவு
விரிந்திருக்கும்!



கவிஞர் மாயாதி (ஆர்த்தி முருகேசன்), சென்னை

திருவிழாவில்
ஆசை ஆசையாய்
வாங்கி வந்த காற்றாடியை
மகள் விளையாடி மகிழ்ந்து
ஓய்ந்ததும் காற்றோடு
விளையாடிக் கொண்டிருக்கிறது
காற்றாடி.
/
ஒருகையிழந்த
மரப்பாச்சி பொம்மைக்கு
தாய்க்குத் தாயாகவும்
சேய்க்குச் சேயாகவும்
தோழிக்குத் தோழியாகவும்
பாவிக்கிறாள்
மூன்று வயதான
மகள் முத்துப்பேச்சி.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# அந்தாதிக் கவிதை

பூங்காற்று தருகிறது
கனவுகள் நினைவுகள்
நினைவுகள் தருகிறது
இறந்தகால ஞாபகங்கள்
ஞாபகங்கள் தருகிறது
இனிமையுடன் இளமை
இளமை தருகிறது
எதிர்கால எண்ணங்கள்
எண்ணங்கள் தருகிறது
நன்மையுடன் தீமை
தீமை தருவதில்லை
உதவியுடன் நன்றி
நன்றி தருவதில்லை
வஞ்சனையுடன் வன்மம்
வன்மம் தருவதில்லை
அறத்துடன் இன்பம்



கவிஞர் ஆதின் ஆரா, அருப்புக்கோட்டை

# வரவேற்போம்

கொடியோர் கொற்றம் வீழ்த்தி
நல்லோர் மகிழ்வுற மலரும் புதிய ஆண்டு.
இன்னல் இல்லா பொழுதுகள்
அமையும் ஆண்டாக இருக்கட்டும்.
இல்லாமை நீக்கி கல்லாமை அகற்றி
கனிவு தரும் ஆண்டாகுக.
அன்பும் அறனும் தழைக்கும் ஆண்டாகுக.
இன்னல் விலகி இன்பம் நல்கும் ஆண்டாகுக.
பழையவை நீக்கி
புதியவை ஏற்று வரவேற்போம்.



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ்நாடு

# மன்னிப்பு



கழுத்தை நெறித்திருந்தாலும்
காலை இடறி இருந்தாலும்
காயங்கள் உண்டாக்கினாலும்
சொற்களால் சிதைத்திருந்தாலும்
சொல்ல இயலாத துயரங்கள்
தந்திருந்தாலும்
மன்னிப்பு கேட்டாலும்
கேட்கவில்லை என்றாலும்
பேதை பெண்ணே
அளித்து விடு அவர்களுக்கு
உன் மன்னிப்பை
அவர்கள் மன்னிக்க தகுந்தவர்கள்
என்பதற்காக அல்ல
உன் மனநிம்மதிக்காக

கவிஞர் குட்டிமா தேவி ஸ்ரீ, விருதுநகர்

# வாசிகசாலை

அறிவுக் கண்களின் தேடு பொருளாய்
ஆன்மாக்களின் அமைதிக் குரலாய்

எண்ணங்களுக்கு வழி அமைக்கும் பாதையாய்
முயற்சியாளனின் புத்தாக்க வாசலாய்

கவிஞனின் கற்பனை உலகமாய்
கதைகள் கூறும் சுவாரஸ்ய பூமியாய்

விஞ்ஞானியின் விந்தை ஞாலமாய்
வரலாறுகள் பேசும் வரப்பிரசாதமாய்

சிற்பங்கள் கொண்ட வண்ண நூலாய்
சிந்தனையைத் தூண்டும் சிந்தைத் தளமாய்

வாசகனை வரவேற்கும் அறிவுக் கடலாய்
எழுத்தாளனை ஏற்றி விடும் ஏணிப்படியாய்

படைப்புக்களுக்கு உயிரூட்டும் பாதையாய்
பொழுதுகளை அழகாக்கும் பொழுதுபோக்குப் பூங்காவாய்

புத்தகங்கள் சுமந்து புது உலகை உருவாக்கும்
உன்னதமான ஆலயம் நீ

கவிஞர் அதீபா ஹஸன், காத்தான்குடி

# கூண்டுப் பறவைகள்

கூடுகள் இல்லா
கூண்டுப் பறவைகள்!

எங்களுக்கு பெயரோ
நரிக் குறவர்கள்!

ஊசி மணி விற்பது
எங்கள் குலத்தொழில்!

இரக்கப்படும் உள்ளங்களே
எங்களுக்கு கோயில்!

வறுமை இன்றி
பிறக்கத்தான் ஆசை!

இறைவனுக்கும் கேட்குமா
எங்களின் ஓசை?

தமிழ்க் குடியின்
நிரந்தர ஏழைகள்!

அதிகார வர்க்கத்தால்
கவலைபடாத அகதிகள்!

பள்ளியில் படிப்பதே
எங்கள் சாதனை!

அதை தொடர முடியாததே
எங்களின் வேதனை!



சமத்துவ மேதைகளுக்கு
அனைவருமே மனிதர்கள்!

அவர்களுக்கும் நாங்கள்
தீண்டத் தகாதவர்கள்!

சிறகடித்து பறக்க
வாழ்வாதாரம் இல்லை!

வாழும் வாழ்க்கையே
எங்களுக்கு எல்லை!

எங்களின் வாழ்க்கையோ
அரசாங்கத்தின் கையில்!

நாங்களும் வாழ்கிறோம்
சிறகடிக்கும் நம்பிக்கையில்!

கவிஞர் அனில் நிலவன், கொசவபட்டி, திண்டுக்கல்

# கலைந்த கனவுகள்



தெளிந்த குட்டையில் சிறு
கல்லொன்று வீழ்ந்தாற் போல்
நொடிப்பொழுதில் அலைமோதி
சிதறின கற்பனைகள்

குழம்பிய குட்டையாய்
கலைந்து போனது கனவுகள்
ஆணி வேரருந்த மரமாய்
ஆடித்தான் போனது

மீனினம் தானும் துள்ளிப்பாய்ந்து
நீந்தி மகிழ்ந்தாலும்
சிறிதேனும் கலங்காமல்
சற்றேனும் வற்றாத குளம்

வழிந்தோடி வந்துபோகும்
உயிர்களையும் வாழவைக்கும்
நீர் வற்றிப் போன குட்டையாய்
வெறுமை ஆட்கொள்கிறது

கலைந்த கனவுகளாய்
மனதும் வெறிச்சோடிப் போனது
புயலான பேரிடர் தொடராகையில்
மீண்டெள நாளாகும்

கலைந்த கனவுகளோடு
வீழ்ந்தழும் பெருஞ்சுமைகளாய்
உடலுக்கு முன்னால் மெதுவாய்
உளம் மாளும்போது

வையகத்தில் இனி வாழ்ந்தென்ன
லாபம் எனத் தோன்றும்

கவிஞர் செண்பகச் சோலையாள், ஆய்ஷ்



அரிது அரிது மானிடராய் பிறத்தல்
பெரிது பெரிது கல்வியால் சிறத்தல்
அன்பாய் வாழ்தல் உயிர்களுக்கு உரியது
அனைவருக்கும் வழங்குதல் உயிரினும் பெரிது
இளமையில் கற்றலும்  கற்றவழி நிற்றலும்
வளம்  பெற்று வாழ்தலும் பெரிதேகேள்
வானளவு தானுயர்ந்து  பிறர் உயர
தேனாய்  நீட்டும் உதவிக்கரம் பெரிது
பதவி வந்தால் ஆடி நிற்காமல்
உதவி புரியும் உள்ளம் பெரிது
வறுமை வந்தாலும் செழுமையை நோக்கி
பெருமையோடு வைக்கும்  சிற்றடி பெரிது
அடுக்கிய கோடி பெறினும் தன்னிலை
கடுகளவும் மாறாமை என்றும் பெரிது
துன்பங்கள் ஆயிரம் துயர் தந்தாலும்
இன்பமாய் எண்ணி ஏற்றல்  பெரிது

கவிஞர் குரு. ஜெயந்தி, சிதம்பரம்

# மௌனம்

சத்தமின்றி உயிர்ப்புடன்
மௌனம் உதிர,
பரவுதல் இன்றி
மனம் கனக்கிறது.

பறத்தல் மறுக்கப்பட்ட
பறவை போல்;
பறத்தல் மறந்திட்ட
பறவை போல்;

இறுதியில்
ஒரு
இறத்தல்,
மறத்தல்,
பறத்தல்,

எதுவும் இன்றி
இந்த மௌனத்தின்
வேதனை எங்ஙனம்;
இறக்கும்?

இசைவில்லா மௌனம்
அசையாமல் இருக்குமதை;
வசைபாடவும் மனமின்றி
மௌனத்தில் கரைகிறது;
முழுதாய் ஒரு நிமிடம்.



கவிஞர் சசிகலா விஸ்வநாதன், பெங்களூர்

# மகாபிரியம்

கொந்தளிக்கும் கடல்
குளமென ஆகும்
கொட்டும் மழைத்துளி
கடலென மாறும்
கொண்டாடுவதற்கு
யாராவது இருந்தால்

சிந்தை மயிலிறகாய்
மெலிதாகும்
சிற்றிதயம் பேரின்ப
மலையாகும்
சதாவிலகா
உறவுதனைச் சுவீகரித்தால்

மனதெங்கும்
மலர்த்தோட்டம்
மிஞ்சிவிடும்
மகா பிரியம்
மென்மையாய்க் கையாள
மனங்களுமே நாடிவிட்டால்



கவிஞர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

# குறுங்கவிதைகள்

மையம் பிடித்து செக்கினை
சுற்றுகிறது மாடு
பணத்திற்காக உடன் சுற்றுகிறது
வாலில்லாத ஆறாம் அறிவு



காமத்தை போர்த்திய
இரவுக்கு ஓர் பயம்
விடியலுக்கு நேரமானால்
விழிங்கிடுமோ இரவென்று

யாரையும் நம்பிவிடாதே
யார் சொல்லும் கேளாய்
இவன் மட்டும் புலம்புகிறான்
வீடு வீடாய் ஊர் ஊராய்

மலைகளை விழுங்கி
கதிரவனை உமிழ்கிறது மேகம்
நிரம்பியும் தாகம் தீரவில்லை
பேராசை காக்கைக்கு

அடிக்கடி கடந்து செல்லும் வழியில்
குழந்தைகளின் விளையாட்டுக்குரல்
இரண்டு கைகளும்
வெறுமெனத்தான் கடக்கிறது இன்று வரை
மழலைகளின் குரலில் வடிந்த கண்ணீர் பாடலுடன்.

கவிஞர் சே. கார்கவி கார்த்திக், நாகப்பட்டினம்

# மழைக்காலத்தில் ஓர் வசந்த காலம்



மழை தரும்
அவளின் நெருக்கம்

காத்திருந்தக் காதலுக்கு
வழிகாட்டியாக
கனத்த மழை.

ஒட்டி உரசியபடி
ஒரு குடைக்குள்
நீயும் நானும்.

நான்
உன்னிடம்
சொல்ல முடியாத
என் காதலை
உன்னுடனான
என் நெருக்கம்
சொல்லிவிடும்.

உன் அருகாமையில்
வேகமான என் மூச்சுக்காற்று
உன் மூச்சுக்காற்றுக்குள் சென்று
சொல்லிவிடும்.

தேகத் தீண்டல்களின்
தொடு உணர்ச்சிகள்
உன் உணர்வுகளிடம்
சொல்லிவிடும்.

இவை அனைத்தும்
நினைவுகளின்
சுவடுகளாக

உனக்குள்ளும்
எனக்குள்ளும்

கொட்டும் மழை நீருக்கு
சொல்லிவிடுவோம் நன்றியை.

கவிஞர் பெ. தனலட்சுமி ஆறுமுகம், சேலம்

# மண் மகள்

தை மகளே வருக வருக
இல்லங்கள் தோறும் இன்பம் பெறுக
உறவுகள் எல்லாம் மகிழ்ச்சி பொங்க
உழவன் வாழ்வில் ஏற்றம் காண
புத்தரிசி புதுப்பானையில் இட்டு பொங்கலோ
பொங்கல் என குலவையிட்டு கொண்டாடி
இனிப்பும் பருப்பும் உணவில் பறிமாறி
தைமகளை வரவேற்று தெருவெல்லாம் கோலமிட்டு
செங்கரும்பு சாறினையும் சுவைத்துச் சென்று
வீதியெங்கும் போட்டிகள் வைத்து பரிசும்
சிறுவர் சிறுமியரை உற்சாகப்படுத்தி வண்ண
வண்ண ஆடைகளையோடு பரிசும் பெற்று
கலகல சிரிப்போடு பூமகளும் மகிழ
தை மாதம் தரணியில் பொன்னான
மாதமாய் வானமும் வெட்கம் கொண்டு
மழையாய் வந்து காதல் சொல்ல
இறைவனும் ஆசீர்வாதத்தோடு மண்ணும் மணந்தது



கவிஞர் ம.செ.அ. பாமிலா பேகம், நாகர்கோவில்

# சிப்பிக்குள் முத்தானேன்

சிற்பியின் கைவண்ணத்தில்
சிங்காரச் சிலையழகானவளே
பிரம்மன் உயிரூட்டலில்
எழிலோவியம் ஆனவளே

கண்ணசைவில் எனைக்
கவர்ந்த காரிகையே
புன்னகையில் சிதைந்தேனே
புத்துணர்வு அடைந்தேனே

கன்னக்குழியில் வீழ்ந்தே
காதலால் களிப்பானேனே
செவ்விதழ் அதரங்களில்
தேனருந்தும் வண்டானேன்

சங்குக் கழுத்தில்
சரணடைந்தேன் கண்ணே
விம்மிய அழகில்
மயங்கிடும் நெஞ்சமே

இதயத்தின் துடிப்பே
கலந்திட்டேன் உன்னுள்ளே
சிப்பிக்குள் முத்தானேன்
உன்னிடம் பித்தானேன்

முத்தத்தின் ஈரத்தில்
களிப்பானது உள்ளமே
முழுமதியாய் இதயத்தில்
ஒளியானாய் அன்பே



தளிருடல் மேனியாளே
சிற்றிடைக் கொடியாளே
தழுவிடு என்னையே
ஏகாந்தமது விலகிடவே

எண்ணத்தில் கலந்தே
வண்ணத்தைக் குழைத்திடு
முப்பொழுதும் உந்தன் நினைவுகளே
மனமெங்கும்

கவிஞர் ப. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# விலைமகள்

இவளின் வியர்வை துளிகளை
விருந்துண்ண காத்திருக்கும்
கழுகுகள் ஏராளம்

இவள் முன் மதங்கள் மண்டியிட
சாதிகள் சட்டையை கழற்றிக் கொண்டன

இவளின் உடல் என்னும் காகிதத்தில்
ஆண்மையின் ஆசைகள் எழுத்துப்பிழைகளாய்

இவள் ஒருவன் கழுத்துக்கு மாலையாகும்
முன்பே பலரின் உடலுக்கு போர்வையானவள்

பிறப்பால் வாழை இலை வடிவம் கொண்ட
இவள் இன்று எச்சில் இலையாய்

இவள் நாள்தோறும் உள்ளத்தை
சிதைத்து உடலை ஊனமாக்கியவள்

இவளின் இரவுகள் பகலின்
மிச்சங்களாய் தினந்தோறும்



கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# நியாயம் கேட்கிறேன்

அநியாயம் நிகழுமிடத்திலே
ஆணவம் குடிகொண்டு இருக்கிறதோ
இதனை அறிந்தவனை
ஈவு இரக்கம் இன்றி
உதைப்பதுதான் நியாயமா - உண்மை
ஊருக்கு மட்டும் தானா - நியாயம் கேட்கிறேன்
எதற்கும் துணிந்தவன்
ஏகாதிபதியாக ஆகிறான்
ஐய்யம் கொண்டவன்
ஒடிங்கி ஒளிகிறான்
ஓராங்கு ஓலமிடுபவனோ
ஔதாரியாக இருப்பது
பஃபத்து சதவிகிதம் நியாயமோ என
நியாயம் கேட்கிறேன்

கண்ணால் கண்டதை வைத்தோ
ஙனத்தை வைத்தோ
சமுதாயத்தை வைத்தோ
ஞமலியை போல நன்றியுடைய
நடத்தையை காண்பதை யன்றி
பணபடைப்பை காண்பது-
நியாயமா என நியாயம் கேட்கிறேன்

தமிழ்நாட்டினிலே
நற்செயல்கள் அனைத்தையுமே
படம்பிடித்துக் காட்டினாலும்
மது விற்பனையை விட்டு
தயாரிப்பை கட்டுபடுத்தாமல் - அதையே
அரசியலாக்குவது நியாயமா என நியாயம் கேட்கிறேன்




லண்டனிலே வாழ்ந்தாலும்
வயநாட்டிலே வீழ்ந்தாலும்
பழமையை மறந்தாலும்
உள்ளம் சொல்கிறதே
சிறந்த வாழ்வுக்கு
வனத்தை அழிப்பது நியாயமா என
நியாயம் கேட்கிறேன்

வார்த்தை - பொருள்
ஔதாரியமாக- பெருந்தன்மையாக
ஓராங்கு - ஒன்றுபோல் , ஒருசேர
பஃபத்து - நூறு
ஙனம் - இடம்

கவிஞர் மு. கவிபாலன் (எ) மு. சோமசுந்தரம், சிதம்பரம்

# தலைமுறைகள் வாழட்டும்




பரை, சேயோள், ஓட்டி பார்க்கவில்லை!
பூட்டியும், பாட்டியும் பார்த்திருப்பாள்!
என் தாயும் அதைக் கடந்திருப்பாள்!
ஆனாலும் பாதகமில்லை!
என் காலத்தில் எல்லாம் மாறியது!
நிலமை இன்னும் மோசமானது!
தடுமாற்றம் தான் வாழ்க்கை!
வீதியில் இறங்கி நடக்க
பயப் பந்து உருளுது வயிற்றில்!
மாறுமோ இந்த நிலைமை?
ஆடை தான் விலகியதோ?
அங்கம் தான் தெரிகிறதோ?
கை கொண்டு மார்பை
மறைக்கும் அவலம்!
முதுகைத் துளைக்கும் பார்வை!
உயிரமுதம் அளித்துப்
பிறந்தவுடன் பசியாற்றப்
படைக்கப்பட்ட முலைகள்!
கண்டவனின் எண்ணத்தில்
காமத்தை விதைத்ததோ?
உடல் கூசிக் குறுகிப் போகும்!
பார்வையால் துகில் உரித்து
நிர்வாணமாய் நடுவீதியில்
நிறுத்தும் வல்லூறின் பார்வை!
காமப்பசிக்கு இரையா பெண்கள்?
கங்கையிலே முழுகினாலும்
பாவம் தொலையாது.
உள்ளத்தில் குமுறும் எண்ணங்கள்!
மௌனமாய், சலனமில்லா
ஆழ்கடலின் மேற்பரப்பாக!

அலைஅலையாகக் கால்
தடவிப் போகிறதே!
இயலாமையில் பொங்கும்
விழிவெள்ளம் வடியத்தான்
காத்திருக்கிறோம்!
ஆளுக்கொரு சாட்டையைச் சுழற்றி
விளாறு விளாறென்று தோல் உரிக்க
ரௌத்திரம் பொங்கும் மனதில்!
கையாலாகாத மௌனம்
காத்திருக்கச் சொல்லுது!
இன்னும் எத்தனைக் காலம்
தான் கடந்து போக?
கஷ்டம் எல்லாம் எம்
தலைமுறையோடு போகட்டும்!
இனி பிறக்கும் பெண்குழந்தைகள்
தலை நிமிர்ந்து வாழட்டும்!

(பரன்,சேயோள்,ஓட்டி தலைமுறை பெண்கள்)

**கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை 119**

# சில குறும்பாக்கள்


நாம்
இருந்து சென்ற
இருக்கையில் இருந்து
கொண்டது நம் ஞாபகம்.

எங்கள் பழைய உடைகள்
உருமாறிக் கொண்டன
தலையனைகளாக.

தலையனையின்
தாகம் தணிக்கிறது
கண்ணீர் துளிகள்.

சிலரின் தூக்கத்தக்
கெடுக்கிறது புத்தகம்
பலருக்கு தூக்கத்தை
கொடுக்கிறது புத்தகம்.

ஒருநிமிடத்தின் நீளத்தை,
நெடுஞ்சாலை விளக்கு,
விளக்கிறது அவசரத்தில்.



கவிஞர் கோ. தனுசன், மட்டக்களப்பு (இலங்கை)

# கூடி மகிழ்தல்!

வீடுதோறும் திண்ணைகள் இருந்த காலமொன்று!
கூடியமர்ந்து ஊரின் நிகழ்வுகளை, நாட்டு
நடப்புகளை அன்றாடம் தமக்குள்ளே பகிர்ந்திடுவர்!
கட்செவிக் குழுமங்கள் இல்லாத காலத்தில்
நட்பு வட்டங்கள் நாளும் கூடிடுவர்!
வானிலை, பயிர்வளர்ப்பு, உறவுகளின் வருகை
அனைத்தும் இடம்பிடிக்கும் இவர்களின் உரையாடல்களில்!
காலமாற்றத்தில் சொந்த ஊரைப் பிரிந்து
பிள்ளைகளுடன் வெளியூர்களில் வாழும் பெரியவர்கள்
சந்திக்க நேர்கையிலே உருவாகும் நட்பு வட்டம்!
அந்திமாலை வேளைகளில் கோயில்கள், பூங்காக்கள்
சந்திக்கும் இடமாகும்1 நட்பு வட்டம் உருவாகும் !
அந்நாளின் நினைவுகளை நிகழ்வுகளை அசைபோட்டு
இன்பம் துன்பம் எதுவெனினும் பகிர்வதால்
மனநிம்மதி, மகிழ்வலைகள் உருவாகும் அவர்களிடம்!
தலைமுறை இடைவெளியால் தனிமையை நாடுவதை
தகர்த்தெறிய ஒத்தவயதினரின் சங்கமங்கள் உறுதுணையாய்!
மூப்பின் சுமைகளைக் குறைத்து மகிழ்வளிக்க
எப்போதும் மகிழ்வுடன் தொடரட்டும் இக்கூடல்கள்!



கவிஞர் ஈ.சீ. சேஷாத்ரி, புதுச்சேரி

# நான் இன்னும் மரணிக்கவில்லை



நான் பல தடவைகள் உடைக்கப் பட்டிருக்கிறேன்.
வேரோடு சாய்க்கப் பட்டிருக்கிறேன்
தூக்கியெறியப் பட்டு கண்ணீரோடு
அமர்ந்திருக்கிறேன்
தவறிழைக்காமல் மண்டியிட்டு
அமர்த்தப்பட்டுள்ளேன்

ஆனாலும் நான் மரணிக்கவில்லை
இன்னும் சற்றேனும் மண்ணறை
வாசம் நுகரவில்லை
எத்தனையோ அன்புள்ளங்களின்
ஆசுவாசப்படுத்தல்களின் அரவணைப்பு
என்னை மீட்டெடுத்திருப்பதாக
உணர்வதால் மீண்டெழுகிறேன்

என்றாவது ஒரு நாள்
நிச்சயம் இந்த ஓடம்
கரைசேருமென கனவுகள் பல
ஆழ் மனதில் புதைத்து
வைத்து தினம் தினம்
சலவை செய்கிறேன்
காயப்பட்ட உள்ளத்தை

கண்களினைத் துளியும் கசக்காமல்
கண்ணீர் வடிக்காமல்
உண்மையில் நான் ஒரு
இரும்பு மனிதன்
என்று கூறி முடிக்கிறேன்.
ஆனாலும் என்னதான் செய்ய
கண்ணீர்தான் முற்றுப்புள்ளி வைக்கிறது

முன்போல் நான் இல்லை என்கிறீர்கள்
ஒரே பதில் தான் புதைத்துவீட்டீர்கள்
ஆனாலும் நான் இன்னும் மரணிக்கவில்லை

கவிஞர் சுமையா சித்தீரர், நெல்லியகம, அநுராதபுரம்

# புத்தகக் காதலி



வாசிப்பின் பிடித்தத்தில்
பக்கங்கள் நேசிப்பாகவே
புத்தக விருப்பமானதே.

எங்கிருந்து வந்தது
இவ்விருப்பமென தேடினேன்

பள்ளி நூலகத்தில்
கிழமை நாளில்
கடைசிப் பாடவேளையிலே

தேடி எடுத்து சுவாரசியத்தொடரில்
பாடவேளை முடிந்து மணி அடித்ததும்

இன்னும் நேரம் நீடித்திருந்தால்தான்
என்னவென்று தோன்ற

விருப்பமின்றியே விருப்பமான புத்தகத்திலே
விட்ட இடத்திற்கொரு அடையாளமிட்டு வைத்து விட்டு

தாயைப் பிரியும்
பிள்ளைப்போல
சுணக்கமாய் வெளியேறிடும் நாட்களில்

ஏக்கத்தோடு விடைப்பெற்று
மீண்டும் ஒரு பாடவேளைக்காக
காத்திருந்து சென்றால்

வைத்த இடத்தில் புத்தகமும் இருக்காது
இருக்கும் அடையாளமும் தென்பாடாமலே

மீண்டுமொரு புத்தகத்தில் தொடங்குமே
என் ப்ரியம்

கவிஞர் சஹீனாஸ் பேகம், முதலைப்பாளி, புத்தளம்

தனிமைக் கவிதைகள்
படிக்கையில்
உலராத காற்றின் நேசம்
மனதுள்

பார்த்ததும் ரசிப்பதும்
சிநேகமாய் சிரிப்பதும்
மனதுக்குள் ஒர் மகிழ்ச்சி

ஆனந்தம் அழைத்துச் செல்லுது
தேடலுக்கு துணையாக
நானும் உன்னுடன் என

வாசித்த கவிதையின்
வரிகளில் ஊர்ந்த மனமோ
உயிர்த்த நிலைக்குள்

அந்த வெளிச்சப் பொட்டுகள்
வா வென்றது அழைக்கிறது
வேக நடையில் அதை தழுவுவதற்குள்
விரிந்த பகல் விளக்கை அணைத்தது

விலகிய இருள்
விலக்கிய பகல்
விலகாதே தென்றலே



கவிஞர் சுந்தரிபாஸ்கரன், திருப்பூண்டி, நாகப்பட்டிணம்

# புள்ளியில்லாத கோலங்கள்

## திலகமது நாடா கவிதை

இருளது விலகுது
மருளது ஓடுது
அருளது வருகுது

படையது குழுமுது
பலமது பெருகுது
பகையது முடியுது

வேலது வருமது
வினையது தீருது
துணையை தருமது

அறமது உயருது
அகமது மகிழுது
முகமது சிறக்குது

தோழமை நாடுது
தோளது தழுவுது
வாகை சூடுது

இனிய செயலது
இனிதென படருது
உவகை மலருது



உறவது விலகுது
உதவா நிலையது
தனிமை தவமது

தமிழது பருகிட
முதுமை விலகுது
இளமை பெருகுது

கவிஞர் செ. இலட்சுமணக்குமார், ஈரோடு

# உறவென்னும் சங்கிலி



வாழ்க்கை என்னும் வீதி
வழி போகும் பயணம் யாவுமே
வாழ்வில் கற்கும் *பாடமாய்*
அமையும் என்பதே அனுபவம்.

ஆயிரம் ஆசைகள் நிறைந்திட்ட
*கடல்* போன்ற வாழ்க்கையில்
ஏற்ற இறக்கம் என்பது
எல்லோருக்கும் ஒன்றுதான்.

வைரம் பாய்ந்த மனமும்
வைராக்கிய எண்ணமும்
நிலைத்திட்ட உள்ளமே
வெற்றி காணும் களமே.

பொன் பொருள் பணமெல்லாம்
பகட்டான வாழ்க்கைக்கு துணையாக இருக்கலாம்
*உறவென்னும் சங்கிலி* அழகாக அமைந்திட்டால்
சுற்றமும் உறவும் கூட பூந்தோட்டமாய் மாறிடும்!

இதயம் என்ற கூட்டிலே அன்பைப் பாச்சி வாழ்ந்திட்டால்
வாழ்வில் என்றும் சுகமாய் *உறவுகாற்று* வீசுமே!

கவிஞர் ஜேப்பி. @ பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

# பெண்மையும் தாய்மையும்

பெண்ணே !
நீ இம் மண்ணில் உதித்த நாள்முதல்
உதிரும் நாள்வரை
நீ ஒவ்வொரு நாளும்
ஒவ்வொரு நிமிடமும் பெருமை கொள்
பெண்மையும் பெண்மையுள்ளும்
மென்மையான தாய்மையுள்ளம் கொண்டவள் நீ
உனக்கு நிகர் இந்த உலகில் நீ மட்டும்தான்



கவிஞர் இரா. சங்கர், ஈரோடு

# காரணகர்த்தா

கடைநிலை இருக்கையானாலுமே
கலகலப்பான இருக்கையாகுமே
கற்றுகொடுப்பவருக்கே கற்றுகொடுத்திடும்
கச்சித மாணவர்களும்

கவனக்குறைவான வானரங்களும்
கனிவான கைதேர்ந்தவர்களும்
கரகோஷமே தனிகோஷமாய்

கண்டவுடன் கேள்வியெழுப்பிட தோணுமே
கடும் பாடுபட்டாலும் மாறாத மாணிக்கங்களே
கண்மூடி தூங்கியே, கரத்தில் அடி வாங்கிடவர்
கணக்குமே திகைத்திடுமே

கருவியாய் வாயாலே
கனிசமாய் பதிலுமே
கவியாய் சொல்லிட்டே
கம்மென்று சிரித்திடவர்

கள்ளத்தனமும்,கபடத்தனமும் வெளியிலே
கள்ளமில்லா உள்ளமும் பெரும்போக்காகவே
கதியென்போர்க்கு கரம் நீட்டுவரே

கடைகோடி மதிப்பெண்ணுமே
கனவாக பெருமை பேசிடுவர்
கடைசலும் கனமாய் கொடுத்தே
கடினத்தையும் எளிதாக்குவரே!

கடைசியில் பெரும் மகிழ்விற்கும்
கனநொடி மாற்றமாய்
கர்ஜிக்கும் கோபத்திற்கும்
கனிசமான காரணகர்த்தாக்களே!



கவிஞர் நீலாசுபாஷ், ஆக்கூர்

## ஆண்டாள் 34 கண்ணன் என்னும் -1-5 5

கண்ணனெனும் எம்பெருமாள் காட்சியிலே கட்டுண்ட
ஆண்டாளும் நலம்பயவா எரிச்சல்சொல் மற்றயலார்
பகர்வதனால் பெண்வருத்தம் அறியாத பெருமானின்
இடுப்பணிந்த பீதாம்பரம் வீசிட்டே தன்விரக
தாபம்தீர் வகையாற்ற வேண்டுவளே முதலாவது
பாசுரத்தே! இரண்டாவது பாசுரத்தே பசுமைதுளிர்
ஆலிலையில் துயில்கொண்டான் நினைவில்தவழ் கோதைதன்
நெஞ்சமதில் வேல்குத்தல் போல்பேசல் வேண்டாவே!
ஆநிரைமேய் ஆயனவன் குடந்தைநகர் குடமாடி
கண்ணனவன் மார்பணைந்த துழாய்மாலை தன்னடர்ந்த
கூந்தலிலே சூட்டிடவே வேண்டுவளே! மூன்றாவது
பாசுரத்தே கண்ணனவன் கடைக்கண்ணின் அம்புபட்டு
வெந்துகிடக்கும் தன்நெஞ்சே குளிரும்படி அன்னவனின்
மார்பணைந்த துளபமாலை தன்மார்பில் புரட்டிடவே
கோருவளே! நான்காவது பாசுரத்தே ஆய்ப்பாடி
கொள்ளையால் அனுபவிக்கும் கண்ணனவன் துன்புறுத்தல்
தளர்வுற்று நொந்தவளை தேற்றுதாயர் கேட்டிடவும்
தம்மிடத்தே அன்னவனின் வாயெச்சில் ரசம்பூச
பருகத்தர வேண்டிடுவள் கோதையே! ஐந்தாவது
பாசுரத்தே கண்ணனவன் வாயமுதம் கிட்டிலவேல்
குழலூதும் போதுதிரும் வீழ்துளிகள் முகம்தடவக்
கோருவளே! அழுதாலும் தொழுதாலும் உருக்காட்டான்!
அஞ்சலெனான்! முன்னாலும் பின்னாலும் இறுக்கிட்டு
அணைத்திட்டே மகிழ்கூட்டாம்! அத்துன்பம் மாப்பெரிதே
என்றுரைப்பள் கோதையே! முதலைந்து ஈண்டுகண்டோம்!
மற்றைந்து தொடர்ந்திடுமே! கோதைதமிழ் எழிற்பாவின்
அமிழ்தருந்தி மகிழ்வோமே! தழலொளியில் குழலிசையால்
மாக்களிப்பு மாந்திட்டே மாலருளால் திளைப்போமே!
பாவையொடு திருமொழியும் பாங்காக ஓதிமகிழ்
களிப்பார்ந்து கோதையொடு கண்ணனருள் பெற்றுய்வோம்!



கவிஞர் கணக்காயன் (இ. சே. இராமன்)


# இறைவனின் கொடை

வானம்
புன்னகை
பதிவு செய்கிறது
காலை பனித்துளியின்
கேமராக்களில்

நெடுங்காடு
காலடித் தடமற்ற
ஒற்றைப் பாதையில்
கதவு திறக்கிறது

அலைகள்
கடற்கரையை
மறுநாள்
மாற்றத்திற்கு
தயார்படுத்துகிறது

உயர்ந்த
மலைகளிடம்
மேகங்கள்
விடை பெறுகின்றன



இரவு தூங்க
எங்கு நோக்கினும்
நிலவு
விழித்திருக்கின்றது

இயந்திர ஓட்டமற்ற
பிரபஞ்சம்
அழகியல்
சுமக்கிறது

இயற்கை
மகிழ்ந்து
மகிழ்விக்க
இறைவனின்
கொடையாகிறது

கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

# மனம் விரும்புதே உன்னை

கண்ணியமான நடத்தையிலும்
நேர்கொண்ட பார்வையிலும்

மிடுக்கான நடையிலும்
வெள்ளந்தியான சிரிப்பிலும்

கனிவான முகத்துடனும்
கோபமில்லா பேச்சிலும்

தூய்மையான அகத்துடனும்
பிறருக்கு உதவும் பாங்கிலும்

ஓயாது உழைத்திடும் ஆர்வத்திலும்
சிறு பிரச்சினைகளையும் இலாவகமாய்க்
கையாளும் திறமையிலும்

நீ கொடுத்திடும்
அளவில்லா அன்பையும் காணக்காண

என் மனமும் விரும்பிடுதே உன்னை!



கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

# ஆயுசுநூறு

காலஇடைவெளிக்குப்பின்
உறவும் நட்பும் சந்திக்கும்
முதல் பார்வையில்
'உனக்கு ஆயுசுநூறு'

உரையாடலின்
தொடர்ச்சியில்
'எப்பொழுதுமே
உன் நினைப்புதான்'

அருகருகே வசித்து
இரத்த உறவாய்
இல்லையெனினும்
உறவுசொல்லி அழைத்து
செய் தொழிலுக்காய்
பிரியும் கணங்களில்
'அடிக்கடி வந்துபோய்
கொண்டிரு'

ஒரே ஊர்
ஒரே கல்லூரி
ஒரே வீதியில்
வசிப்பிடம் என
சுற்றி வந்த
நட்புக்கூட்டம்
பேசுகையில்
'இப்படியே
வாழ்நாள் முழுவதும்
போக வேண்டும்'



இதில் வைத்திருக்கின்ற
பாசம் உண்மைதான்
பிரிவின் சோகம்
உண்மைதான்

ஆனால்
அதற்கான
உதட்டு வார்த்தைகள்
உணர்வு மயமானவை
சாத்தியமற்றவை

கவிஞர் சந்திரராஜன், மானாமதுரை



நட்பை தவிர
அனைத்து உறவிலும்
சாதிகள் விளையாடுதடி பாப்பா
****

பிரதிபலிக்கும் போதே
இவ்வகை தோரணம் என்றால்
சொந்தமாய் ஒளி இருந்தால் விழுங்கிவிடும் சூரியனை
நிலவு.
****

மூங்கில் தட்டி வீடுகள்
கொஞ்ச நாளில் இடம் பெற வாய்ப்புள்ளது
மியூசியத்தில்
****

சபிக்க பட்ட வாழ்க்கை
உயிரோடு இருப்பது மட்டுமே
****

இன்றோடு முடியப்போகிறது
"இன்று"
****

அழகுற அடுக்கி இருக்கும்
ரிடையர்ட் ஸ்டாப் வீட்டில்
செய்தித்தாள்
****

தொலைத்ததை எழுதும்
கவிஞன் அல்ல
தோன்றுவதை எழுதும்
ரசிகன் நான்
****

என்னிடம் பணம் தரவில்லை என்றால்
செருப்பு பிஞ்சிடும் என்றான்
செருப்பு தைப்பவன்
****

என்னிடம் பணம் தரவில்லை என்றால்
செருப்பு பிஞ்சிடும் என்றான்
செருப்பு தைப்பவன்
****

தடவ தடவ சுகிக்கும்
தொடுதிரை
****

ரவுடியிசம் ரன்னிங் இல்
சைட் ஸ்டாண்டு போடுவது
****

நான்கு எலுமிச்சையின் சத்து
நான்கு எலுமிச்சையில் தான் இருக்கும்
விளம்பர தொல்லையில் ஒரு கவிதை
****

சாரணர் படைப்போல்
இடதும் வலதுமாய் நெற்கதிர்கள் வயலில்
காற்று கட்டளையிட

கவிஞர் சிரஞ்சீவி இராஜமோகன், கும்பகோணம்

எண்ணங்களை விழுங்கி
உன்னிடம் இடையறாது
சேரும் என்னுயிர்
*

மன இருட்டில்
உன் நினைவு
கலங்கரை விளக்கு
*

உன் கண் வலையில்
விழவே வருகிறேன்
தூண்டில் போடு
*

கைவிலங்கு
உற்சாகமாகப் பூட்டுகிறேன்
உன் நினைவு
*

புருவ அடைப்புகளில்
பொட்டாய் ஒட்டு
மோட்சம் பெறுவேன்
*

சுவாசத்தில் நறுமணம்
உன் பேச்சு
என் அருகில்
*



எப்போது சொல்ல
மனதைத் தேற்றும்
நீயும் நானும்
*

ஒருவழிப் பாதை
நுழைவதெப்படி
உன் மனவெளிக்குள்
*

மனக்கண்ணாடியில்
ஒப்பிக்கிறேன்
உன்னிடம் சொல்ல
*

உறுத்தும் தூசு
நீ சொல்வாயா
நான் சொல்வேனா

கவிஞர் இளையவன் சிவா

# அம்மா...



மாசிலாமணி பெற்ற மாசில்லாத் தங்கம்
வேணுகுசலாம்பாள் தரித்த உயிரிலோர் அங்கம்
காவிரிக் கரையோர மாயவரத்திலே பிறந்தாய்!
கொள்ளிடக் கரையோர திருச்சியில் மறைந்தாய்!
சூலுற்ற வேளையிலே பெரியம்மை கண்டாய்!
தீயான வலியுடனே என்னம்மை எனையீன்றாய்!
என்னைப் பெற்றெடுக்க சிந்திய செந்நீர்
இன்று நினைத்தாலும் பொங்குதே கண்ணீர்!
கருவாய்ச் சுமந்ததால் பூமிக்கு வந்தேன்!
நெருப்புக்கு உனையீந்து தாளாது நொந்தேன்!
காவிரிக் கரையோர காட்டினில் சிதைத்தீ
கையால் கொள்ளியிட்டு நானுனை எரித்தேன்!
காவிரியில் பூம்புகாரில் இராமெசுவரக் கடலில்
கேதார் கட்டத்தில் கங்கையிலும் கரைத்தேன்!
வீட்டிற்கு எவர்வரினும் புன்னகை வரவேற்கும்!
அன்ன பூரணியாய் உன்கரங்கள் உணவளிக்கும்
சென்னீரை அமுதாக்கி என்பசி தீர்த்தாய்!
ஒற்றை தேனீருடன் உலகினை நீத்தாய்!
உறைந்து போனதோ உன்முகத்தில் புன்னகை!
இனியும் அணிவேனோ நானோர் பொன்னகை?
அகவை தினத்தைக் கடக்காது உயிர்விட்டாய்
இனியென் கண்களுக்கு என்றுமே நீ எட்டாய்
எவரிடமும் உனக்கு என்றுமிலை வன்மம்!
நீ சுமக்காது இனியும் வேண்டாமொரு சென்மம்!
இறுதிவரை எவர்க்கும் தரவில்லை சிரமம்!
உனக்கெனக் கண்ணீருடன் அன்பின் வரிசைக் கிரமம்!
வானின்று உன்கரங்கள் வாழ்த்துமழை பொழியும்!
உன்நினைவை மறவாது என்னாயுள் கழியும்!
உயிர் பிரியும் வேளையிலே ஏக்கமென்ன கொண்டாயோ?
எழேழு ஜென்மத்திலும் நானதை தீர்ப்பேனோ?

கவிஞர் ரவிஜி

இரயில்வே நிலையத்தில் முதல் வகுப்பு குளிர்வசதிப் பெட்டியின் வாயிலில் மந்திரி வலம்புரி மாதவன்நின்று கொண்டிருக்க வந்திருந்த கட்சித்தொண்டர்கள் மாலையிட்டு ''மந்திரிவாழ்க'' என்று கோசம் போட, வழியனுப்ப வந்திருந்த தமிழ்மன்ற உறுப்பினர் பூங்கொத்துக் கொடுத்து வழியனுப்பிக் கொண்டிருந்தனர்.

மந்திரி மாதவனிடம் கட்சியின் தலைவர் ஒருவர் ''அண்ணே! பூனாவிலிருந்து மும்பைக்குத் திரும்பி வருவீர்களா? இல்லை அப்படியே சென்னைக்கு போகிறீர்களா?'' என்றுகேட்டார்.

''பூனேயில் ஒரு பொதுக்கூட்டம் நம்முடைய பழைய தலைவி ஒருத்தி கம்பெனி ஆரம்பித்திருக்கிறார்கள். அந்தக் கம்பெனியின் ஆரம்பவிழா முடிந்து அநேகமாக மும்பை திரும்பி இங்கிருந்து தான் விமானத்தில் கிளம்புவேன்.''

''நீங்கள் மும்பை வரும் போது, தொடர்பு கொண்டு தொலைபேசியி ல்சொன்னால் வந்து சந்திப்பதற்கு வசதியாக இருக்கும்.''

''அதெல்லாம் ஒன்றும் வேண்டாம். நான் யாரையும் சந்திக்காமல் சென்னை திரும்பிவிடலாம் என்றிருக்கிறேன். சென்னையிலும் மும்பையிலும் என் பொதுக்கூட்டங்களில் இப்படி அசம்பாவிதம் நடக்குமென்று நான் எதிர்பார்க்கவில்லை. அதனால் இனி கொஞ்சநாள் பொதுக்கூட்டங்களில் கலந்து கொள்ள வேண்டாம் என்று நினைக்கிறேன்.'' என்று மாதவன் சொல்லிக் கொண்டிருந்த போது, அடுத்து இருந்த இரண்டாம் வகுப்புப் பெட்டியில் முகத்தைமறைத்துக் கொண்டு அமர்ந்திருந்த பழனி எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்தான்.

இரயில் நிலையத்தில் ஆங்கிலத்திலும் இந்தியிலும் "மூன்றாவது பிளாட்பாரத்தில் நிற்கும் இரயில் இன்னும் பத்து நிமிடத்தில் பூனாபுறப்படும். இந்த சதாப்தி எக்ஸ்பிரஸ்க ல்யாண், கர்ஜத், லோனாவாலா ஆகிய இரயில்வே நிலையங்களில் மட்டும் நிற்கும். பயணிகள் தங்களுடைய உடைமைகளை சரிபார்த்து பாதுகாப்பாக வைத்துக்கொள்ள கோரப்படுகிறார்கள். "என்று அறிவித்துக்கொண்டிருந்தார்கள்.

தொண்டர்கள் போட்டிருந்த மாலைகளைக் கழற்றி எதிரில் நின்ற கூட்டத்திடையே எறிந்து விட்டு தமிழ் மன்றத்தின் தலைவர் ரெம்ஜிஸ் கண்ணில் பட்டதும், அவரை அழைத்து ''என்ன சார் அந்தப் பையனைப் பற்றி ஏதாவது தகவல் கிடைத்ததா?'' என்றுகேட்டார் வலம்புரி மாதவன்.

''இல்லை சார்.'', ''எனக்கென்னவோ அவன் என்னைத் தொடர்ந்து கொண்டிருக்கிறான் என்றுதான் தோன்றுகிறது. எதற்கும் அவனைப் பற்றி ஏதாவது தகவல் தெரிந்தால் உடனடியாக எனக்குத் தகவல் தெரிவியுங்கள்.'' என்றார் மந்திரி.

''கண்டிப்பாகசார். நாங்கள் நடத்திய நிகழ்ச்சியில் இப்படி ஒரு அசம்பாவிதம் நடந்ததே எங்களுக்கு மிகப் பெரிய வருத்தமாக இருக்கிறது. அந்தப்பையன் முகம் நன்றாக நினைவிருக்கிறது. கண்டிப்பாக அவனைப் பார்த்தால் உடனடியாக உங்களுக்கும் போலீஸுக்கும் தகவல் தெரிவிக்கிறேன்.'' என்றார் ரெம்ஜிஸ்.

சிக்னல் பச்சை விளக்கிற்கு மாற, இரயில் எஞ்சின் சப்தம் எழுப்ப, "நீங்கள் எதைப்பற்றியும் கவலைப்பட வேண்டாம். அடுத்து எப்போது நிகழ்ச்சிகள் வைத்தாலும் அழைப்புவிடுங்கள், கண்டிப்பாகக் கலந்துகொள்கிறேன்.'' என்றார் வலம்புரி மாதவன்.

''மிக்க நன்றி சார்.'' என்று ரெம்ஜிஸ் கையசைக்க இரயில் கிளம்பியது.

மந்திரி எல்லோருக்கும் கையசைக்க, இரயில் வேகமாக ஓட ஆரம்பித்தது. பழனி ஒருகதவில் நின்று கொண்டிருப்பதை பார்த்து ரெம்ஜிஸ் ''அதோ அந்தப் பையன் ரயிலில் போகிறான்.'' என்றுசப்தமிட்டார்.

அந்தக் கூட்டத்தில் யாரும் கவனிக்காததால் ரெம்ஜிஸ் என்ன செய்வதென்று யோசித்தவன் 'ஒருவேளை பிரமையாக இருக்கும். அந்தப் பையனைப் போல இருந்தான் அந்தப் பயணி'. என்று நினைத்துக் கொண்டான்.

தன் இருக்கையில் வந்தமர்ந்த பழனி தலையில் கட்டியிருந்த ஏறக்குறைய முகத்தை மறைத்துக் கட்டியிருந்த கைக்குட்டையை எடுத்து விட்டு, டவலால் முகத்தை துடைத்துக்கொண்டான்.

மந்திரியை எப்போது சந்திக்க வேண்டும். கல்யாண், கர்ஜத் தாண்டி குகைக்குள் இரயில் ஓடும் போது போய்ப் பார்க்க வேண்டும். முதலில் அதிர்ச்சியடைந்து என்னைத் தாக்கவரலாம். அருகில் அமர்ந்திருப்பவர்கள் அவருக்கு உதவ வந்தால் பிரச்சனையாகிவிடும்.

முதல் வகுப்புப் பெட்டியில் போய் கழிவறைக்கு அருகில் நின்று கொள்ள வேண்டும். மந்திரி அந்தப் பக்கம் வரும் போது கதவைத் திறந்து கீழே தள்ளி விட்டால் உடனடியாக பரலோகப் பதவிதான்.

'இல்லையெனில் கழிவறைக்குள் சென்றதும் உள்ளே நுழைந்து கையை முறுக்கி கழுத்தை நெறித்தால்... முதலில் வலம்புரி மாதவன் அழிச்சாட்டியம் செய்தாலும் கொஞ்சம் கொஞ்சமாக கழுத்தில் ஆதாம் எலும்பு ஒடிய அவனுடைய ஆவி பறந்து போய்விடும். என் தங்கையின் மனதும் சாந்தியடையும்.' மனதில் பலவிதமாக எண்ணங்கள் ஓட அருகில் வந்த டீக்காரனிடம் ''ஒரு சாய் கொடுப்பா'' என்று சொல்லி காசு எடுத்து கொடுத்து விட்டு டீ வாங்கிக் கொண்டான்.

''என்னப்பா சாயா குடிக்கிறாயா? என்று மந்திரியின் குரல் கேட்க, ஒரு நிமிடம், அவயமெல்லாம் ஒடுங்கிப் போக, தலையைத் திருப்பி அவசரமாக முகத்தை மூடிக்கொண்டான்.

அருகில் இருந்த நபரிடம் வந்த மந்திரி ''நான் அடுத்தாற் போல் உள்ள முதல் வகுப்பு குளிர் வசதிப் பெட்டியில் மூன்றாம் எண் படுக்கையில் தான் அமர்ந்திருக்கிறேன். ''முரளி நீ சாயா குடித்ததும் என்னைவந்துபார்.'' என்று சொல்லி விட்டு மந்திரி திரும்பிப் போக அப்போது தான் மூச்சு வந்தது பழனிக்கு.

இழுத்து மூச்சு விட்டுக் கொண்டான். அருகில் டீ குடித்துக் கொண்டிருந்த முரளியைப் பார்த்தான். மந்திரியின் தொண்டனாக இருக்கலாம். இவனைப் பார்க்கவந்த போது, என்னைத்திரும்பிப்பார்த்திருந்தால்.. பார்த்திருந்தால்என்னாகியிருக்கும்.

கோழிக் குஞ்சை அமுக்குவது போல என்னை மந்திரியும் அவருடைய தொண்டன் இந்த முரளியும் மற்றவர்களும் சேர்ந்து அமுக்கிப் பிடித்துக் கொண்டு இரயிலை நிறுத்தி என்னைக்காவல் துறையிடம் ஒப்படைத்து விடுவார்கள். அப்புறம் வாழ்நாள் முழுவதும் களி திண்று கொண்டு ஜெயில் கம்பிகளை எண்ணிக் கொண்டிருக்க வேண்டியது தான்.

இனி மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். இந்த முரளி மந்திரியைப் பார்க்கப் போன பிறகு தான் மெதுவாக எழுந்து முதல் வகுப்பு ஏ.சி. கம்பார்ட்மெண்டுக்குப் போய் பாத்ரூம் அருகில் நிற்க வேண்டும்.

மந்திரி எழுந்து அந்தப்பக்கம் வரும் வரை 'உறுமீன் வருமளவும் காத்திருக்குமாம் கொக்கு' என்பது போல காத்து நிற்கவேண்டும்.

இந்த முறை என் குறி தவறக்கூடாது. எந்த அடையாளமும் இல்லாமல் இவனை சிவலோகப் பதவியடைய வைத்துவிட்டு அடுத்த இரயில் நிலையத்தில் இரயில் நின்றதும் இறங்கிப் போய்விட வேண்டும். யோசித்துக் கொண்டே உட்கார்ந்திருந்தவன், அவனை அறியாமல் தூங்கிப் போய்விட்டான்.



தொடரும்...

திரு இரஜகைநிலவன்


"கவிமாமணி" இரஜகை நிலவன்
மராத்திய மாநில தமிழ் எழுத்தாளர் மன்ற வெளியீடு

பெண்மையைப் போற்ற
வந்த பெருங்கவியே
பார் போற்றும்
தாய்மை சிறக்கவே
மாந்தர் பெருமைகளை
எடுத்துரைத்த கவிஞரே

பெருமையுள்ளம் கொண்ட
பெண்மையை பா வடித்தவரே
விளக்கென்றால் திரியாக
இருப்பாள் விரலென்றால்
நகமாக இருப்பாள்
வானமென்றால் இருளில்

நிலஒளி வீசுவாள்
வாழ்க்கையென்றால் இதயத்தில்
துணைவியாக பின்வருவாள்
பிள்ளைகள் நலனே
தம் நலம் என நினைத்திடும்

பெண்மையைப் போற்ற
வந்த சிறந்த கவியே
சர்வ சாதாரணமாக
பிறந்தவள் அல்ல
பெண் சர்வாதிகாரத்துடன்
சாதிக்க பிறந்தவளே




என நயம்பட
உரைக்க வந்த அருங்கவியே
ஆண்மக்களின் உள்ளங்களை
கொள்ளை கொண்டவளும்
ஆளுமை திறத்துடன்
உலகத்தை ஆள்பவளும்

மழை தரும்
கருநிற மேகம் போன்றவளும்
மனதில் சுகம்
தரும் இதய துடிப்பும்
கடலில் அலையும்
கண்ணில் விழியும்

நம்மை சுமக்கும்
பூமித்தாயும் பெண்
என பகர
வந்த பாவலரே
மடியினில் சுமப்பவளும்
கருவறையில் சுமந்தவளும்

பெண்ணே என
போற்ற வந்த பெருங்கவியே
வாழ்க வாழ்க
நன்றியுரைத்தோம் அகமகிழ

உலகிற்கு உணவீந்தே
உலக உலை கொதித்திட
உன்னதமே பொங்கிடுமே
வயல்வெளி நாகரிகமும்.



சிறப்பு.வாழ்த்துக்கள் கவியே!

"கவிச்சிகரம்" ஐயா இரஜகை நிலவன் எழுதிய நந்தவனத் தொகுப்பில் ஆசிரியரின் நேர்கொண்ட நோக்கும், நேர்மை போற்றும் போக்கும், ஆக்க சிந்தனையும், உலகத்தோடொட்டி ஒழுகலும் ஆக்கபூர்வமான கருத்துகளை, அறிவுரைகளை வழங்குவதில் குறைவைக்கவில்லை.

பாவலருக்கு பா எழுதும்போது வார்த்தைகள் வரிசைகட்டி நிற்கின்றன.அருமை.



## கட்டுரை



### பிறப்பு:

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் அருகில் உள்ள காயாமொழி என்ற கிராமத்தில் பிறந்தார் (1905). தந்தை, வழக்கறிஞர். சிவந்தி பாலசுப்ரமணியன் ஆதித்தன் என்பது இவரது முழுப்பெயர்.



### கல்வி:

ஸ்ரீவைகுண்டத்தில் ஆரம்பக்கல்வியும் திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரியில் முதுகலைப் பட்ட படிப்பும் பயின்றார்.

கல்லூரியில் படிக்கும்போது 'தொழில் வெளியீட்டகம்' என்ற பதிப்பகத்தைத் தொடங்கி, மெழுகுவர்த்தி செய்வது எப்படி?, தீப்பெட்டித் தயாரிப்பது எப்படி? ஊதுபத்தி தயார் செய்வது எப்படி? உள்ளிட்ட பல நூல்களை எழுதி வெளியிட்டார். சென்னை சட்டக் கல்லூரியில் சட்டம் பயின்றார். லண்டன் சென்று பாரிஸ்டர் பட்டம் பெற்றார்.

### பணி:

'சுதேசமித்ரன்', 'டைம்ஸ் ஆஃப் இந்தியா' மற்றும் லண்டனிலிருந்து வெளிவந்த 'ஸ்பெக்டேட்டர்' வார இதழ் ஆகியவற்றில் கட்டுரைகள் எழுதினார். இந்தியா திரும்பியவுடன் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கறிஞராகப் பணியாற்றினார். பின்னர் சிங்கப்பூர் சென்று பணியாற்றினார்.

திரு குமரர். தர்மசீலன், இதழாசிரியர்

**இதழ் துவக்கம்:**

1942-ல் தமிழகம் திரும்பினார். முதன்முதலில் 'மதுரை முரசு' என்ற வாரம் இருமுறை இதழையும், பின்னர் 'தமிழன்' என்ற வார இதழையும் தொடங்கினார். யாருக்கும் அஞ்சாமல் உண்மை செய்திகளை வெளியிட வேண்டும் என்ற கொள்கையுடையவர். இதனால் இவரது பத்திரிகையை ஆங்கில அரசு தடை செய்தும்கூட தன் கொள்கைகளை மாற்றிக் கொள்ளாதவர்.

1942, நவம்பர் மாதம், மதுரையில் 'தினத்தந்தி' நாளிதழை வெளியிட்டார். தொடர்ந்து, 'மாலை மலர்' என்ற மாலைப் பத்திரிகையையும் 'ராணி' என்ற வார இதழையும் தொடங்கினார். 1947-ல் 'தினத்தாள்', 'தினத்தூது' ஆகிய பத்திரிகைகளையும் தொடங்கினார்.

எளிய சொற்கள், சிறிய வாக்கியங்கள், கவர்ந்திழுக்கும் தலைப்புகள், கருத்துப் படங்கள் உள்ளிட்ட உத்திகளைக் கையாண்டார். 'ஒரு படம் ஆயிரம் சொல்லுக்குச் சமம்' என்ற சீனப் பழமொழிக்கேற்ப தனது நாளிதழில் ஏராளமான படங்களுடன் செய்திகளை வெளியிட்டார்.

**இயக்கங்களும், கட்சிகளும்:**

அனைத்துவிதமான செய்திகளையும் வெளியிட்டு அனைவரும் தங்கள் அறிவை வளர்த்துக் கொள்ளவும் நாட்டு நடப்புகளைத் தெரிந்து கொள்ளவும் உதவினார். மாதம் ஒரு நாவல் என்ற திட்டத்தின் கீழ் 'ராணி முத்து' என்ற இதழை ஆரம்பித்தார்.

காகிதம் கிடைக்காத காலத்தில் தொழிலாளர்களுடன் சேர்ந்து காகிதக் கூழ் காய்ச்சி, அதைக் காகிதமாக மாற்ற கடுமையாக உழைத்தார். மாணவர்களுக்கு என 'வெற்றி நிச்சயம்' என்ற இயக்கத்தைத் தொடங்கி

திரு குமார். தர்மசீலன், இதழாசிரியர்

### இயக்கங்களும், கட்சிகளும்:

மாணவர்களுக்கு என 'வெற்றி நிச்சயம்' என்ற இயக்கத்தைத் தொடங்கி கல்வியை வளர்த்தார்.


தமிழரசுக் கட்சி, நாம் தமிழர் இயக்கங்களைத் தொடங்கி தமிழ் மக்களின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டார். 1942 முதல் 1953 வரை தமிழக சட்டப்பேரவை மேலவை உறுப்பினராகவும், 1957 முதல் 1962 வரை சட்டப்பேரவை உறுப்பினராகவும், 1967-ல் சபாநாயகராகவும், 1969-ல் தமிழக அமைச்சரவையில் கூட்டுறவு மற்றும் விவசாய அமைச்சராகவும் பணியாற்றினார்.

### அமைச்சராக:

மு. கருணாநிதி 1969 பெப்ரவரி இல் ஆட்சியைப் பிடித்தவுடன் ஆதித்தனார் கூட்டுறவுத் துறை அமைச்சர் ஆனார். இதில் ஸ்ரீவைகுண்டம் இருந்து அவர் அமைச்சரவைக்கு மறு தேர்வு செய்யப்பட்டார். 1971 தேர்தல்களில் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் தலைவராக தொடர்ந்து பங்காற்றினார்.

### பிற்கால அரசியல் வாழ்க்கை:

திமுகவிலிருந்து, 1972 இல் எம். ஜி. இராமச்சந்திரன் பிரிந்து அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் (அதிமுக)வை உருவாக்கினார். பிறகு ஆதித்தனார் அதிமுகவை ஆதரித்தார். 1977 தேர்தலில் அவர் போட்டியிட்டு தோல்வியடைந்தார். சாதான்குளத்திலிருந்து அதிமுகவை சுயாதீனமாக ஆதரித்தார். 1980 தேர்தலில் ஸ்ரீவைகுண்டத்திலிருந்து தோல்வியடைந்தார்



**எழுதிய நூல்கள்:**

"இதழாளர் கையேடு" என்ற நூலை எழுதி வெளியிட்டார். அந்நூல் இதழாளர்களுக்கு இன்றும் பயன்படும் நூலாக விளங்குகிறது. 'தமிழ்ப் பேரரசு' என்ற நூலும் எழுதியுள்ளார். இவரது பெயரில் இரண்டு தமிழ் இலக்கிய விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. தமிழ்ப் பத்திரிகை உலகில் புரட்சிக்கு வித்திட்ட சி.பா.ஆதித்தனார்.

**மறைவும் மரபும்:**

இவர் தனது 76 ஆம் வயதில் 1981 ஆம் ஆண்டு மே மாதம் 24 ஆம் தேதி காலமானார். 2005 ஆம் ஆண்டில், அப்போதைய தமிழக முதல்வர் ஜெ. ஜெயலலிதா 1928 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட ஸ்ரீவைகுண்டத்தில் உள்ள அவரது வீடு நினைவுச்சின்னமாக மாற்றப்படும் என்று அறிவித்தார். இவருக்கு இரண்டு மகன்கள் உள்ளனர். பி.ராமச்சந்திரன் ஆதித்யன் (தேவி வீக்லியின் நிறுவனர்) மற்றும் பி.சிவந்தி ஆதித்யன். ஒவ்வொரு ஆண்டும் அவரது பிறந்த நாளில், எஸ்.பி. ஆதித்தனார் மூத்த தமிழ் அறிஞர் விருது ரூ. 300,000 மற்றும் எஸ்.பி. ஆதித்தனார் இலக்கிய விருது ரூ. 200,000 தமிழ் அறிஞர்களுக்கும், இலக்கியத்தில் சிறந்து விளங்கும் மக்களுக்கும் ஆதித்தனாரின் மகனும், தினத்தந்தி குழுவின் தற்போதைய இயக்குநருமான சிவந்தி ஆதித்தனரால் வழங்கப்படுகிறது. சென்னையில் சாலையை இணைக்கும் எழும்பூர் செல்லும் அண்ணா சாலை , அவரது நினைவாக "ஆதித்தனார் சாலை" பெயரிடப்பட்டது.



நாளை

# நமதே

## ஒருவனின்
## தெளிவான குறிக்கோளே
## வெற்றியின் முதல் ஆரம்பம்

அகர முதல இலக்கியப் பேரவை

அகமும் தமிழே — முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு — அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு — சிவம் அறக்கட்டளை


தொடர்பிற்கு :

9597887847
8870884969




# அகர முதல இலக்கியப் பேரவை


Aagaramuthalaa — www.aagaramuthala.com — aagaramuthala@gmail.com